**<u>அசல் வழக்கு எண். 48/2009</u>**

நாள் 21.08.2018

**Name: தர்மலிங்கம் (வா.சா.1/1ம் வாதி)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி...</u>**

தாவா சொத்தில் ஏற்கனவே அலமேலு ஆச்சி என்பவருக்கு 1 காணி பாத்தியம். அதை 1972ம் ஆண்டில் எனது தந்தை வாய்மொழியாக கிரையம் வாங்கியுள்ளார். அந்த விபரம் எனக்கு நேரிட்டுத் தெரியாது. அப்பொழுது எனக்கு சுமார் 14 வயது இருக்கும். தாவா சொத்தில் ஏற்கனவே நடராஜன் பிள்ளை என்பவருக்கு 1 1/4 காணி பாத்தியமாய் இருந்தது. அந்த 1 1/4 காணி என்பது தாவா சொத்தில் கீழ்புறம். அந்த 1 1/4 காணியை என் அப்பா நடராஜன் பிள்ளை என்பவரிடமிருந்து 1966ம் ஆண்டு கிரையம் வாங்கியுள்ளார். அந்த கிரைய பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அலமேலு ஆச்சி, நடராஜன் பிள்ளை மற்றும் சரோஜா ஆகியவர்கள் உடன்பிறந்தவர்கள். மேற்கண்ட மூவரும் இறந்துவிட்டார்கள். அலமேலு ஆச்சிக்கு சுப்ரமணியன், சிதம்பரம் என்ற இரண்டு மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். அதில் சிதம்பரம்பிள்ளை மகன் முத்தையன் என்பவர் உயிருடன் உள்ளார். மற்றொரு மகன் சுப்ரமணியன் இறந்துவிட்டார். நான் நடராஜன்பிள்ளையிடம் 1966ல் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் ஏற்பட்டதாக கூறும் விபரத்தை எனது பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்விவரம் பிராதில் சொல்லவில்லை என்றாலும், இவ்வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் 50 செண்டை நாராயணசாமி என்பவருக்கு என் அப்பா கிரையம் கொடுத்துவிட்டார். அந்த 50 செண்ட் என்பது தாவா சொத்தில் வடமேற்கு மூலை. அந்த விபரத்தை எனது பிராதில் நான் சொல்லவில்லை என்றால் ஆமாம். தாவா சர்வே எண்ணில் 50 செண்ட் நாராயணசாமிக்கு கொடுத்தது போக எஞ்சிய சொத்துக்கள் 1994ம் வருடம் உட்பிரிவு ஆகிவிட்டதா என்றால் ஆமாம். சர்வே எண். 251/1என்பது 1994ம் வருட சர்வேயில் 251/1எ1, 251/1எ2, 251/1எ3, 251/1பி, 251/1சி என உட்பிரிவுகள் ஆகிவிட்டது என்றால் சரிதான். அதில் 251/1எ1 என்பது 251/1எ1எ, 251/1எ1பி, 251/1எ1சி என மூன்று உட்பிரிவுகள் ஆகிவிட்டது என்றால் ஆமாம். அந்த உட்பிரிவுகள் 7.1.2000ம் ஆண்டில் ஏற்பட்டது என்றால் ஆமாம். தாவா சொத்தில் கட்டுப்பட்ட புதிய புல எண்.251/1பி 3 ஏக்கர் 34 செண்ட் பட்டாவிலிருந்து வருவாய் ஆவணங்களில் புறம்போக்காக மாற்றம் செய்யப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். நத்தமாக ஆதிதிராவிடருக்காக மாறிவிட்டதா

என்றால் ஆமாம். தாவா சொத்தில் ரவிச்சந்திரன், ராஜேந்திரன், சுந்தரவடிவேல், அனிதாபாரதி ஆகியவர்கள் பெயருக்கு உட்பிரிவுகளை அனுசரித்து பட்டா மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 251/1எ1ல் கண்ட சொத்தில் ஒரு பகுதி ஆதிதிராவிடருக்காக எடுக்கப்பட்டது. வா.சா.ஆ.1, 2 ஆதரவில் கண்ட சொத்து முழுவதும் என் அனுபவத்தில் இல்லையென்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 பட்டா கூட்டுப்பட்டா என்றால் சரிதான். வா.சா.ஆ.3 கூட்டுப்பட்டாவில் கண்ட மற்றும் இருவர் என்பது சரோஜா, அலமேலு ஆச்சி. வா.சா.ஆ.4 என்பது தாவா சொத்தை நத்தமாக மாற்றுவதற்கு முன்பு கட்டப்பட்டது என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு நானோ, என் சகோதரர்களோ தீர்வை ஏதும் செலுத்தவில்லை என்றால் ஆமாம். தொடர்ந்து தாவா சொத்துக்கள் முழுவதும் நான் அனுபவிக்காத காரணத்தினால்தான் நானோ என் சகோதரர்களோ தீர்வை ஏதும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 தாவா சொத்து முழுவதும் சம்மந்தப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 என்பது வழக்கு சொத்து சம்மந்தப்பட்டது அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.5 வழக்கிற்ககு சம்மந்தமில்லாத சொத்து என்றாலும், நீதிமன்றத்தை குழப்பவேண்டி தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.6 தாவா சொத்தில் ஒரு பகுதிதான் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.7 என்பது தீர்வை ரசீகள் அல்ல என்றாலும் அவைகள் புறம்போக்கிற்கு செலுத்தக்கூடிய தண்ட தீர்வை ரசீது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எந்தவொரு பகுதியையும் வாய்மொழி கிரையமாக என் தந்தை அலமேலு ஆச்சி மற்றும் அவர் சகோதரிடமிருந்து வாய்மொழியாக கிரையம் பெற்றதாக கூறும் விபரம் உண்மையல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தில் ஒரு காணி விஸ்தீர்ணம் உள்ள சொத்தை 1 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தை கோவிந்தனுக்கு சுமார் 25 வருடங்களுக்கு முன்பே என் தந்தை வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் 1 ஏக்கர் 50 செண்டை சிதம்பரம ்பிள்ளை இறப்பிற்கு பின் அவரது வாரிசுகள் சுப்ரமணியன், முத்தையன் ஆகியோரிடமிருந்து 16.6.1998 தேதிய முச்சலிக்காபடி பிரதிவாதிகளின் தந்தை கோவிந்தனுக்கு கிடைக்கபெற்று அவராலும், அவரது வாரிசுகளான 1 முதல் 4 பிரதிவாதிகளும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் வாய்மொழியாக பிரிவினை செய்துகொண்டு தலா 1/2 காணி வீதம் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எனது சகோதரர் சின்னதுரையின் வாரிசுகளுக்கும், எனக்கும் எவ்வித விரோதமும் கிடையாது. தாவா சொத்தில் ஏற்கனவே

கரும்பு செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் ஏற்கனவே 1 முதல் 4 பிரதிவாதிகள் என்ன பயிர் செய்தார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. நான் தாவா சொத்து உள்ள கிராமத்தில் இல்லை என்றாலும், தாவா சொத்து அனுபவம் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், தேவையின்றி இப்பிரதிவாதிகளை அலைகழிக்க பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அக்காரணத்தினால் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு நான் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கவேண்டும் என்றாலும் சரியல்ல. 7,8 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சிங்கப்பூரில் வசித்து வருகிறார்கள் என்றாலும், அவர்களை தேவையில்லாமல் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
ஜெயங்கொண்டம்.